## கார்கில் முதல் கன்னியாகுமரி வரை

# 67 நாட்களில் 4,200 கி.மீ. ஓடியே கடந்த கல்லூரி மாணவர்

## இளைஞர்களிடம் போதை பழக்கத்தை தடுக்க விழிப்புணர்வு முயற்சி

**நாகர்கோவில், ஜூலை.9–**

போதை தடுப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கார்கில் முதல் கன்னியாகுமரி வரை சுமார் 4,200 கி.மீ தூரத்தை, 67 நாட்களில் கடந்து கல்லூரி மாணவர் சாதனை படைத்தார்.

இந்தூரை சேர்ந்தவர் கார்த்திக் ஜோஷி (23). பயோ மெக்கானிக் என்ஜினீயரிங் முதலாண்டு படித்து வருகிறார். இந்தியாவில் வளர்ந்து வரும் அல்ட்ரா எண்ட் ரன்ஸ் விளையாட்டு வீரரான இவர், கடந்த மே 2–ம் தேதி கார்கிலில் இருந்து நீண்ட தூர ஓட்டத்தை தொடங்கினார். ஜம்மு காஷ்மீர், பஞ்சாப்,அரியானா, டெல்லி, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய 7 மாநிலங்கள் வழியாக 4,200 கி.மீட்டர் தூரத்தை கடந்து, நேற்று முன்தினம் தனது ஓட்டத்தை கன்னியாகுமரியில் நிறைவு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கார்கிலில் தொடங்கியஇந்தசாதனை பயணத்தின்போது உயரமான மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், வயல்வெளிகள், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாறுபட்ட வானிலைகளைக் கடந்து, இந்த ஓட்டத்தை நிறைவு செய்துள்ளேன். இன்றைய இளைஞர்கள் விளையாட்டு போட்டிகளில் ஈடுபட வேண்டும். தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். போதை பழக்கத்தில் இருந்து இளைஞர்கள் விடுபட வேண்டும். இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எனது ஓட்டத்தின் நோக்கம்.

இதற்கு முன்பு, தென் ஆப்பிரிக்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் உலகின்மிகப்பிரபலமான ஹாம்ரேட்ஸ் மாரத்தான் போட்டியில் பங்கேற்றுள்ளேன். இதுவரை 80 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் ஓடியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

தேக்கடி மலைப்பகுதியில் புல்வெளியில் யானைகள் மேய்ச்சலுக்கு வந்து செல்கின்றன.

## பல்கலை.யில் காலியாக உள்ள

# துணைவேந்தர்கள் நியமனத்துக்கு 5 பேர் தேர்வுக் குழு

## அமைச்சர் தகவல்

**சென்னை, ஜூலை 9**

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் காலியாக உள்ள துணைவேந்தர் பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுக் குழுக்களில் தமிழக அரசின் சார்பில் கூடுதலாக ஓர் உறுப்பினரை சேர்க்க கோரப்பட்டுள்ளதாகவும்,

இதற்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் விரைவில் துணைவேந்தர்கள் நியமனம் நடைபெறும் என தமிழக உயர்கல்வித்துறைஅமைச்சர் பெ.விஸ்வநாதன் தெரிவித்தார். சென்னை தரமணியில் உள்ள டாக்டர் மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியை மாலையில் உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் ஆய்வு செய்தார். பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக முதல்வருடன் கடந்த ஜூலை 6 ஆம் தேதி நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனம் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

துணைவேந்தர்களை நியமனத்திற்கான தேர்வுக் குழுவில் ஆளுநரின் உறுப்பினர் தலைவராகவும், பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர்,அரசின்உறுப்பினர்எனமூன்று பேர் முன்பு நியமனம் செய்யப்பட்டனர்.

ஆனால், முன்னாள் ஆளுநர் ஆர்.என். ரவி பல்கலைக்கழக மானியக் குழுவின் உறுப்பினர் ஒருவரையும் சேர்த்து துணைவேந்தர் நியமனத் தேர்வுக் குழு (நான்கு உறுப்பினர்கள்) அமைக்க வேண்டுமென கூறினார். இந்த விவகாரம் நிலுவையில் இருந்தது.

இந்த பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட இருக்கிறது. ஏற்கெனவே இருக்கும் உறுப்பினர்களோடு,தற்போது அரசின் சார்பில் சிண்டிகேட் உறுப்பினர் ஒருவரை துணைவேந்தர் தேர்வுக் குழுவில் நியமிக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கு தமிழக ஆளுநர் இசைவு கொடுப்பார் எனக் கருதுகிறேன். மூன்று நபர் குழுவாக இருந்த துணைவேந்தர் நியமன தேர்வுக் குழு 5 பேர் கொண்ட குழு பேர் குழு அமைக்கப்பட்டவுடன் துணை வேந்தர் நியமனங்கள் விரைவாக நடைபெறும்என்ற நம்பிக்கை உள்ளது. பல்கலைக்கழகங்களில் வேந்தராக காலம் கால மாக ஆளுநரே இருந்துள்ளனர். ஆனால், கடந்த முறை சவால் இருந்தது. முதல்வர் வேந்தராக இருப்பதா அல்லது ஆளுநர் வேந் தராக தொடர்வாரா என்ற சவால் இருந்தது. இந்த முறையும் தமிழக அரசின் சார்பில் வேந்தராக தமிழக முதல்வர் இருக்க வேண்டும் என்கிற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் பணிக்கு கடந்த டிசம்பரில் 42,000 பேர் தேர்வு எழுதினர். சில புகார்கள் குறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் (டிஆர்பி) விரிவாக ஆய்வு செய்தது. அதில் எந்தவிதக் குளறுபடியும் இல்லை என டிஆர்பி தெரிவித்துள்ளது. இதனால் இப் பணிக்கான நேர்காணல் விரைவில் நடத்தப்படும்.

உதவிப் பேராசிரியர் நியமனத்தில் அரசு தலையீடு இருக்காது என்றார் அவர்.

## சுற்றுலாத் தலங்களில் உள்ள

# தங்கும் விடுதி உணவகங்களில் ரூ.99– க்கு பிரியாணி வழங்க ஏற்பாடு

## அமைச்சர் உத்தரவு

**சென்னை, ஜூலை. 9**

சுற்றுலாத் தலங்களில் உள்ள விடுதி உணவகங்களில் ரூ.99–க்கு பிரியாணி வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்று அலுவலர்களுக்கு சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேஷ் குமார் உத்தரவிட்டுள்ளார். தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து, துறை அமைச்சர் ரஜேஷ்குமார் தலைமையில் ஆய்வுக் கூட்டம், சேப்பாக்கத்தில்நேற்றுநடைபெற்றது. இந்த கூட்டத்தில், ஓட்டல் தமிழ்நாடு, அமுதகம் உணவகம், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் நடத்தப்படும் 15 படகு குழாம்கள், ஆலயம் தங்கும் விடுதிகள், 15 சொகுசு பேருந்துகளுடன் தமிழகம் முழுவதும் இயக்கப்படும் 64 சுற்றுப் பயண தொகுப்புகள், 8 குயிக் பைட்ஸ் விற்பனை நிலையங்களில் தற்போது நடைபெற்று வரும் பணிகள் குறித்து அலுவலர்களிடம் அமைச்சர் கேட்டறிந்தார்.

அனைத்து தங்கும் விடுதிகளிலும் ‘டைனமிக் பிரைசிங்’ கட்டண முறையை தொடர்ந்து செயல்படுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களில் மே மாதம் முதல் நடைபெற்று வரும் உணவுத் திருவிழாவை சிறப்பாக நடத்தவும், முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கும் விடுதி உணவகங்களில் பிரியாணி ரூ.99–க்கும், அசைவ விருந்து ரூ.499–க்கும் விடுமுறை நாட்களில் வழங்க வழிவகை செய்யுமாறு அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், சுற்றுலாத் துறை செயலர் சி.ஸ்வர்ணா, இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், இணை இயக்குநர் அ.சிவபிரியா, தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் சி.லட்சுமி பிரியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விக்கிரமங்கலம் அருகே

# 80 அடி கிணற்றில் விழுந்த 2 நாய்கள்

## உயிருடன் தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்

**சோழவந்தான் ஜூலை 9**

மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம் அருகே பாண்டியன் நகர் பகுதியில் பிரபாகரன் என்பவர் தோட்டத்தில் அதே பகுதியை சேர்ந்த மருது பாண்டி வசித்து வருகிறார் தோட்டத்தை காவல் காக்க வேலை பார்த்து வரும் இவர் பாதுகாப்பிற்காக இரண்டு நாய்களை வளர்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் இந்த இரண்டு நாய்களும் நேற்று ஒன்றுக் கொன்று சண்டையிட்ட நிலையில் தோட்டத்தில் இருந்த 80 அடி ஆழ கிணற்றில் விழுந்தது இதனைஅடுத்து கிணற்றுள் விழுந்த இரண்டு நாய்களும் உயிர்க்காக போராடியது நாய்களின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த பிரபாகரன்மற்றும்மருதுபாண்டி உடனடியாக சோழவந்தான் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தனர் சோழவந்தான் தீயணைப்பு நிலைய அதிகாரி முத்துக்குமரன் தலைமையில் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து கிணற்றுக்குள் தத்தளித்து கொண்டிருந்த இரண்டு நாய்களை வலைகள் உதவியுடன் மீட்டு மேலே கொண்டு வந்தனர் கிணறு மட்டமாக இருப்பதால் நாய்கள் கிணற்றுக்குள் விழுந்து விட்டதாக அதிகாரிகள் கூறிய நிலையில் மலையடிவாரப் பகுதி என்பதால் மான்கள் உள்ளிட்ட வன விலங்குகள் அடிக்கடி இந்த பகுதிக்கு வரும் நிலையில் அவைகளும் கிணற்றுக்குள் விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருப்பதாக கூறும் அதிகாரிகள் உடனடியாக கிணற்றுக்கு பாதுகாப்பு சுவர் எழுப்ப வேண்டும் என்று அறிவுறுத்திச் சென்றனர் கிணற்றில் விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நாய்களை மீட்ட தீயணைப்புத் துறையினரை இந்த பகுதி பொதுமக்கள் பாராட்டினர்.


**அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைஸ் லிமிடெட்.** ACRE MAKING ASSETS WORK

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:** 14வது தளம், ஈரோஸ் கார்ப்பரேட் டவர், நேரு பிளேஸ், புது தில்லி-110019தொலைபேசி: 91-11-43115600தொலைநகல்: 91-11-43115618

**கார்ப்பரேட் அலுவலகம்:** யூனிட் எண்: 502, சி விங், ஒன் பிகேசி, ரேடியஸ் டெவலப்பர்ஸ், ப்ளாட் எண்: சி-66, ஜி-பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், மும்பை - 400051 தொலைபேசி: 022 68643101

**மின்னஞ்சல்: acre.arc@acreindia.inஇணையதளம்: www.acreindia.inCIN: U65993DL2002PLC115769**

**பின்னிணைப்பு IV-A**
**அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

நிதிப் பத்திரமாக்கல் மற்றும் மறுசீரமைப்பின் கீழ் அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு சொத்துக்கள் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002, பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(6) மற்றும் 9(1)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கப்படுகிறது.கீழே விவரிக்கப்பட்டுள்ள, Assets Care & Reconstruction Enterprise Ltd. [CIN: U65993DL2002PLC115769] ( " பிணையம் வைக்கப்பட்ட கடன் வழங்குநர்") மீது அடமானம்/பற்று வைக்கப்பட்ட அசையாச் சொத்துக்கள், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியாகப் பெறப்பட்ட நிலையில், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநருக்குச் சேர வேண்டிய தொகையை வசூலிப்பதற்காக, பின்வரும் கடன் வாங்குபவர்(கள்), இணை-கடன் வாங்குபவர்(கள்), அடமானம் வைப்பவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்(கள்) ஆகியோரிடமிருந்து "உள்ளபடியே", "உள்ளதை உள்ளபடியே" மற்றும் "இருப்பவை அனைத்தும்" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்குபவர்(கள்), இணை-கடன் வாங்குபவர்(கள்), அடமானம் வைப்பவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்பதிவு விலை மற்றும் முன்பண வைப்புத்தொகை:

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள்**

| வ எண். | கடன் கணக்கு எண்/ அறக்கட்டளையின் பெயர் | கடன் வாங்குபவர்(கள்)/ கூட்டுக் கடன் வாங்குபவர்(கள்)/ அடமானம் வைப்பவர்(கள்)/ உத்தரவாதம் அளிப்பவர்களின் பெயர் | மொத்த நிலுவைத் தொகை (ரூபாயில்) | முன்பதிவு விலை (ரூபாயில்) | முன் பண வைப்புத்தொகை (ரூபாயில்) | டிமாண்ட் டிராஃப்ட்/RTGS/NEFT மூலம் EMD செலுத்துவதற்கான வங்கிக் கணக்கு விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 203517000051/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி/ ACRE196 TRUST | 1) ரஞ்சித் தங்கப்பன் 2) ஆர். ரேஷ்மா | ரூ. 2,18,85,024/- (இரண்டு கோடி பதினெட்டு இலட்சம் எண்பத்தைந்தாயிரத்து இருபத்து நான்கு மற்றும் அதற்கு மேல்)28-02-2026 அன்றுள்ளபடி , இதனுடன் 29-02-2026 முதல் பணம் செலுத்தி வசூலாகும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன். | 1,11,32,000/- | 11,13,200/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, ஸ்ரீவாசபுரம் கிராமம், ஸ்ரீ சாய் நகரில் அமைந்துள்ள, சர்வே எண் 159/1-ஐ உள்ளடக்கிய, ப்ளாட் எண் 36 கொண்ட 2235 சதுர அடி நிலம்; நிலத்தின் எல்லைகள்: வடக்கே: பூகெய்ன் வில்லாக்கள்; தெற்கே: சாலை; கிழக்கில்: நில உரிமையாளருக்கு மீதமுள்ள நிலம், மேற்கில்: மனை எண் 35; குன்றத்தூர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்குப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. அட்டவணை B: அட்டவணை "A" நிலத்தில் 1156 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் 2543 சதுர அடி பரப்பளவுள்ள வில்லா எண் 36B சூப்பர் பிளிண்ட் பகுதி (பொதுப் பகுதிகள் மற்றும் பொதுப் பங்குகள் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 203521000002/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி/ ACRE196 TRUST | 1) வினோத் குமார் 2) வில்பி தத்தாகுமார் | ரூ. 1,78,38,635/- (ஒரு கோடி எழுபத்தெட்டு இலட்சம் முப்பத்தெட்டு ஆயிரம் அறுநூற்று முப்பத்தைந்து மற்றும் எண்பத்திரண்டு மட்டும்) 28-02-2026 அன்றுள்ள நிலவரப்படி, பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன், 29-02-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரை. | 1,00,33,000/- | 10,03,300/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கிIFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, ஸ்ரீவாசபுரம் கிராமம், ஸ்ரீ சாய் நகரில் அமைந்துள்ள, சர்வே எண்கள் 157/1, 157/2A, 157/2B-ஐ உள்ளடக்கிய, மனை எண்கள் 71, 72, 73, 74, 75, 76, 77 மற்றும் 78 கொண்ட 6295 சதுர அடி பரப்பளவுள்ள நிலம்; நிலம் எல்லையிடப்பட்டது; வடக்கில் 63 முதல் 70 வரையிலான மனை எண்கள்; தெற்கில்: சாலை; கிழக்கில்: நில உரிமையாளருக்கு மீதமுள்ள நிலம், மேற்கில்: சாலை, குன்றத்தூர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்குப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. அட்டவணை B: அட்டவணை "A" நிலத்தில் 1042 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் 2292 சதுர அடி சூப்பர் பிளிந்த் பரப்பளவு கொண்ட வில்லா எண் 71 (பொதுப் பகுதிகள் மற்றும் பொதுப் பங்குகள் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 203517000049 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி/ ACRE 196 TRUST | 1) எஸ். விஷாலி 2) ஆர். ஸ்ரீதர் | ரூ. 1,57,29,816/- (ஒரு கோடி ஐம்பத்தேழு இலட்சம் இருபத்தொன்பது ஆயிரம் எண்ணூற்றுப் பதினாறு ரூபாய் மட்டும்) 28-02-2026 அன்றுள்ள நிலவரப்படி, பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன், 29-02-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரை. | 82,42,000/- | 8,24,200/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, ஸ்ரீவாசபுரம் கிராமம், ஸ்ரீ சாய் நகரில் அமைந்துள்ள, சர்வே எண்கள் 159/1 மற்றும் 157/1 (பட்டா 159/14 & 157/14-இன் படி) ஆகியவற்றில் அடங்கிய, மனை எண் 35-ஐக் கொண்ட 1705 சதுர அடி பரப்பளவுள்ள நிலம். இந்த நிலத்தின் வடக்கு எல்லைகள்: பூகெய்ன் வில்லாஸ்; தெற்கு எல்லை: சாலை; கிழக்கு எல்லை: மனை எண் 36; மேற்கு எல்லை: மனை எண் 34. குன்றத்தூர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்குப் பதிவு மாவட்டத்திற்குள். அட்டவணை B: அட்டவணை "A" நிலத்தில் 856 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் 1883 சதுர அடி சூப்பர் பிளிந்த் பரப்பளவு கொண்ட வில்லா எண் 35A (பொதுப் பகுதிகள் மற்றும் பொதுப் பங்குகள் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 203517000050/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி / ACRE 196 TRUST | 1) எஸ் பானுமதி 2) ஆர் சங்கர் | ரூ. 1,41,42,061/- (ஒரு கோடி நாற்பத்தொரு இலட்சம் நாற்பத்திரண்டு ஆயிரம் அறுபத்தொரு ரூபாய் மட்டும்)28-06-2026 அன்றுள்ள நிலவரப்படி, பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன், 29-06-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரை. | 81,73,000/- | 8,17,300/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, ஸ்ரீவாசபுரம் கிராமம், ஸ்ரீ சாய் நகரில் அமைந்துள்ள, சர்வே எண்கள் 159/1 மற்றும் 157/1 (பட்டா 159/14 & 157/1A-ன் படி) ஆகியவற்றில் அடங்கிய, மனை எண் 35 கொண்ட 1705 சதுர அடி பரப்பளவுள்ள நிலம். நிலத்தின் எல்லைகள்; வடக்கே: பூகெய்ன் வில்லாக்கள்; தெற்கே: சாலை; கிழக்கே: மனை எண் 36; மேற்குப் பக்கம்: மனை எண் 34; குன்றத்தூர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்குப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. அட்டவணை B: மேலே உள்ள அட்டவணை "A" நிலத்தில் 849 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு மற்றும் 1867 சதுர அடி சூப்பர் பிளிந்த் பரப்பளவு கொண்ட வில்லா எண் 35B (பொதுப் பகுதிகள் மற்றும் பொதுப் பங்குகள் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 000203517000189/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி / ACRE 196 TRUST | 1) கார்த்திகா 2) பி ஆனந்தகுமார் | ரூ. 1,06,00,936/- (ரூபாய் ஒரு கோடி அறுபத்தெட்டு, 50,000/- இலட்சம் தொள்ளாயிரத்து முப்பத்தாறு மட்டும்) 28-06-2026 அன்றுள்ள நிலவரப்படி, பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன், 29-06-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரை. | 48,50,000/- | 4,85,000/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** கட்டிடம் அமைந்துள்ள, பிரிக்கப்படாத பங்காக 596 சதுர அடி கொண்ட அந்த நிலம்,1 ஏக்கர் 94.4 சென்ட் நிலத்தில், பிளாட் எண் E3, மூன்றாவது தளம், பிளாக் A, வடக்கு பிரிவு, கட்டப்பட்ட பகுதி 1698 சதுர அடி, பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட, "ராயல் டவுன்"-இல், பட்டா எண் 2072-இன் கீழ், சர்வே எண் 434/10-ஐ உள்ளடக்கியது, செட்டிபுண்ணியம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, முன்னர் காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு துணைப் பதிவு மாவட்டம் ஜூயின்ட் 11 மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கே: சர்வே எண்கள் 381 & 383 இல் உள்ள வன நிலங்கள் மற்றும் சர்வே எண் 434/1C இல் உள்ள நிலம்; தெற்கே: 30 அடி சாலை மற்றும் செந்தில் நகரில் உள்ள மனை எண் 70; கிழக்கே: பஞ்சாயத்து சாலை மற்றும் சர்வே எண்கள் 434/2C மற்றும் 433/1 இல் உள்ள நிலம்; மேற்கே: காப்புக்காடு மற்றும் OSR நிலம். 1 ஏக்கர் 94.4 சென்ட் நிலத்தில் 596 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு. பிளாட் எண் E3, மூன்றாவது தளம், பிளாக் A, வடக்கு பிரிவு, கட்டப்பட்ட பகுதி 1698 சதுர அடி. இதில் பொதுப் பகுதி மற்றும் ஸ்டில்ட் தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் பார்க்கிங் ஆகியவை அடங்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 000203517000133/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி/ ACRE 196 TRUST | 1) பி. செந்தில் குமார் | ரூ. 84,26,310/- (எண்பத்து நான்கு இலட்சம் இருபத்தாறாயிரத்து முன்னூற்றுப் பத்து மட்டும்)28-02-2026 அன்றுள்ள நிலவரப்படி , இதனுடன் 29-02-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள். | 33,81,000/- | 3,38,100/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது செங்கல்பட்டு மாவட்டம்), செங்கல்பட்டு தாலுகா, செட்டிப்புண்ணியம் கிராமத்தில் உள்ள "ராயல் டவுன்" என்ற இடத்தில் அமைந்துள்ள, பட்டா எண் 2072-இன் கீழ் வரும், சர்வே எண் 434/ID-ஐ உள்ளடக்கிய, 1 ஏக்கர் 94.4 சென்ட் நிலத்தில், கட்டிடம் உட்பட 467 சதுர அடி பிரிக்கப்படாத பங்குக் கொண்ட நிலப்பகுதி மற்றும் கட்டிடம் அடங்கிய முழு நிலப்பகுதி. இது செங்கல்பட்டு இணை II துணைப் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. இதில் பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட 1398 சதுர அடி கட்டப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட 1398 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு ஆகும். எல்லைகள்: வடக்கே: சர்வே எண்கள் 381,434/IC & 383 இல் உள்ள வன நிலங்கள் மற்றும் சர்வே எண் 1 இல் உள்ள நிலம்; தெற்கே: 30 அடி சாலை மற்றும் செந்தில் நகரில் உள்ள மனை எண் 70; கிழக்கே: பஞ்சாயத்து சாலை மற்றும் சர்வே எண்கள் 434/2C மற்றும் 433/1 இல் உள்ள நிலம்; மேற்கே: காப்புக்காடு 6 மற்றும் OSR நிலம். 1 ஏக்கர் (94.4 சென்ட்) நிலத்தில் 467 சதுர அடி வரையிலான பிரிக்கப்படாத பங்கு, பிளாட் எண் P4, நான்காவது தளம், பிளாக் B, தென்மேற்குப் பிரிவு, கட்டப்பட்ட பகுதி 1398 சதுர அடி (பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 000203517000177/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ACRE 196 TRUST | 1) எஸ். ரம்யா | ரூ. 83,52,422/- (எண்பத்து மூன்று இலட்சம் ஐம்பத்து இரண்டு ஆயிரம் நாநூற்று இருபத்து இரண்டு மட்டும்)28-02-2026 அன்றுள்ளபடி , 29-02-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன். | 35,07,000/- | 3,50,700/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** "ராயல் டவுன்" இல் உள்ள 1 ஏக்கர் 94.4 சென்ட் நிலத்தில், பட்டா எண் 2072-இன் கீழ், கட்டிடம் கொண்ட 489 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதன் ஒரு பகுதி. இது செட்டிப்புண்ணியம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்காவில் (முன்னர் காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம்) உள்ள சர்வே எண் 434/1D-இல் அமைந்துள்ளது. இதில் பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட 1398 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு ஆகும். மேலும் இது செங்கல்பட்டு இணை II துணைப் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கே: சர்வே எண்கள் 381 மற்றும் 383-இல் உள்ள வன நிலங்கள் மற்றும் சர்வே எண் 434/1C-இல் உள்ள நிலம்; தெற்கே: 30 அடி சாலை மற்றும் செந்தில் நகரில் உள்ள மனை எண் 70, கிழக்கே: பஞ்சாயத்து சாலை மற்றும் சர்வே எண்கள் 434/2C மற்றும் 433/1 இல் உள்ள நிலம்; மேற்கே: காப்புக்காடு மற்றும் OSR நிலம். 1 ஏக்கர் (94.4 சென்ட்) நிலத்தில் 467 சதுர அடி வரையிலான பிரிக்கப்படாத பங்கு, பிளாட் எண் P4, நான்காவது தளம், பிளாக் B, தென்கிழக்கு பிரிவு, கட்டப்பட்ட பகுதி 1398 சதுர அடி (பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் உட்பட).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 203517000138/ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி / ACRE 196 TRUST | 1) பிரதீப்குமார் நவீன் | ரூ. 83,10,777/- (எண்பத்து மூன்று இலட்சம் பத்தாயிரத்து எழுநூற்று எழுபத்தேழு ரூபாய் மட்டும்) 28-06-2026 அன்றுள்ள நிலவரப்படி, இதனுடன் 29-06-2026 முதல் பணம் செலுத்தப்பட்டு வசூலாகும் தேதி வரையிலான பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்கள். | 33,81,000/- | 3,38,100/- | கணக்கு பெயர்: ACRE-196-TRUST கணக்கு எண்: 054302000052351 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி IFSC குறியீடு: IOBA0000543 |

**பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம்:** பிளாட் எண் N4, நான்காவது தளம், பிளாக் B, தென்கிழக்கு பிரிவு, 1398 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு, பொதுப் பகுதி மற்றும் தரைத்தளத்தில் உள்ள மூடப்பட்ட கார் பார்க்கிங் உட்பட, பிளாட